# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,909—1970 ජූනි 5 වැනි සිකුරාදා—1970.6.5

14,909 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு யூன் மாதம் 5 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யக்கூடியதாக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் | 487 | ஆயவரிவகையும், குத்தகை விற்பனையும் | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 491 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | — | ஏல விற்பனைகள் | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | — | பலவித அறிவித்தல்கள் | — |


## பதவிகள் — வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக் குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினல் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு ' நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் ' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்
அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எம். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அச்சகர்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 1[illegible] ந் தி.

---

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.*

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க.ப.த.ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சி சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

*5. வேண்டிய தகைமைகள்— விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.*

*6. யுத்தசேவைச் சலுகை—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7. பிற தேவைகள்—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காதா*

---

இல. AA. 46/X. 2245/70.

## இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி

### பொறிமுறைப் பொறியியலாளர் பதவிகள்

இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதியில் பொறிமுறைப் பொறியியலாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதுப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, அ.பெ. இலக்கம் 500, கொழும்பு 1 என்ற முகரிக்கு பின்வரும் திகதிகளில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள்—1970.6.20.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—1970.6.27.

குறிப்பு.—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும், 9" × 4" அளவிற்குக் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும் அபேட்சகராக வரவிருப்போர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லாதவரா என்பதையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக்கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப்படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச்செலவும் :**—இலங்கை அரசாங்கத்தின்கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கிறார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—(i) பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உள்ளதானதுமாகும். அவர்கள் மூன்று வருடம் தகுதிகாண் நிலையிலிருந்து பயிற்சி பெறுதல்வேண்டும். விதவைகள் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகைகள் செலுத்தவேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் நியமனம் செய்யப்படுமுன்னர் உடற்றகுதியுள்ளவர்கள் என்பதைக் கணிக்குமுகமாக, நியம கண்பரீட்சையுட்பட ஒரு மருத்துவச் சோதனையில் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர். மேலும் அவர்கள் மூன்றுவருடகால பயிற்சியினை உண்மையுடனும் ஊக்கத்துடனதும் முடிப்பதற்காகவும், குறைந்தபட்சம் 15 வருடங்களாவது அரசாங்கத்திற்கு சேவை செய்யவேண்டுமென்பதற்காகவும் ஓர் ஒப்பந்தமும், முறியும் செய்யுமாறும் வேண்டப்படுவர். முறி ரூபா 40,000 ற்கு ஆகும்.

(ii) பயிற்சியின் விபரம் பின்வருமாறு—

(அ) 2½ வருடம்—புகையிரதப் பகுதி பிரதம பொறிமுறைப் பொறியியலாளர் அறிவுறத்தலின்படி செய்முறைக்குரிய பயிற்சி பெறுவதற்கு இரத்மலானை புகையிரதப் பகுதி வேலைக்களத்தில் வேலை செய்யவேண்டும் ;

(ஆ) 6 மாதம்—பல ஓடும் பாதைக் கொட்டில்களிலும், மற்ற அலுவலகங்களிலும் வேலை செய்து ஏற்றியிறக்கற்றினைக்களத்தில் பொறிமுறைப்பிரிவில் செய்முறைக்குரிய அனுபவம் பெற வேண்டும் ;

(இ) புகையிரதப் பகுதி வேலையைப் பொறுத்தவரையில் அனுபவமும், பொறுப்புணர்ச்சியும் பரந்த மனப்பான்மையும் உண்டாவதற்கு எந்தப் பதவியிலும் எந்தக் கடமையையும் கூடிய சம்பளம் இல்லாமல் செய்யவேண்டும்.

(iii) மூன்று வருட தகுதிகாண் காலத்துக்குள் தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள்—

(அ) புகையிரதப் பகுதி பிரதம பொறிமுறை பொறியிலாளரால் அறிவுறுத்தப்பட்ட வேலைக்களப் பயிற்சியில் திறமையுடன் கோட்பாட்டிலும், செய்முறையிலும் சித்தியடையவேண்டும் ;

(ஆ) புகையிரதப் பகுதி பாதுகாப்பு விதிகளிலும் பிரமாணங்களிலும் திறமையுடன் சித்தியடைய வேண்டும் ;

(இ) புகையிரதப் பகுதி பரிபாலன அறிவுறுத்தல்களிலும், அரசாங்க சேவை அதிகார சபையின் விதிகளிலும், நடைமுறைக் கைந்நூல்களிலும், நிதிப்பிரமாணங்களிலும், புகையிரதப் பகுதியை பொறுத்தவரையில் திறமையுடன் சித்தியடைய வேண்டும்.

(iv) மூன்று வருடதகுதிகாண் காலத்திற்குள் சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைய வேண்டும்.

(v) பயிற்சியாளரின் தனிப்பட்ட தேவையைப் பொறுத்து எந்தப் பிரிவிலாவது பயிற்சிக்காலத்தை பொது முகாமையாளரின் விருப்பப்படி மாற்றலாம். மேலேகாட்டிய எந்த நிபந்தனைக்காவது திருப்தி அளிக்காவிட்டால் அல்லது பயிற்சிக் காலத்தில் வேலையையும் குணத்தையும் பொறுத்தவரையில் திருப்தியான அறிக்கை எடுக்காவிட்டால் நியமனத்திலிருந்து பயிற்சியாளர் நீக்கப்படுவர்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிகளுக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு :—

ரூ. 7,800—3 × 360—8,880/9,600—4 × 360 உம் 11 × 480—ரூ. 16,320 வருடத்திற்கு.

(ரூ. 9,600 ற்கும் ரூ. 13,920 ற்கும் முன் வினைத்திறமைகாண் தடைகளுண்டு).

**குறிப்பு.**—நியமனம் பொறுபவர்கள் திட்டத்திலுள்ள,—

(i) ரூ. 13,440 ற்கு மேல் சம்பளம் பெறுதற்கு, ஏ. எம். ஐ. மெக், ஈ. பட்டம் அல்லது எவ். ஐ. ஈ. (இலங்கை) பட்டம் அல்லது எம். ஐ. ஈ. (இலங்கை) பட்டம் பெற வேண்டும்.

(ii) ஏ. எம். ஐ. மெக். ஈ. அல்லது எவ். ஐ. ஈ. (இலங்கை) அல்லது எம். ஐ. ஈ. (இலங்கை) பட்டம் பெற்றுள்ள ஓர் அபேட்சகர் தெரிவுசெய்யப்பட்டால் ஆண்டுக்கு ரூபா 9,960 ஆரம்ப சம்பளத்தில் மேற்குறிப்பிட்ட சம்பளத்தில் நியமிக்கப்படுவார்.

(iii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் ஆண்டுக்கு 9,960 ரூபா சம்பளத்திட்டத்தை அடையுமுன்னர் ஏ. எம். ஐ. மெக். ஈ, அல்லது எவ். ஐ. ஈ. (இலங்கை) அல்லது எம். ஐ. ஈ. (இலங்கை) பட்டத்தைப் பெற்றுக்கொண்டால், அத்தகுதியை அடைந்த திகதியிலிருந்து அன்னார் ஆண்டுக்கு ரூ. 9,960 சம்பளத்தைப் பெற அருகதையுள்ளவராவர்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையவர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல்நலமுடையவராயும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) 1970.6.20 இல், 21 வயதிற்குக் குறையாதவராயும் 30 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும் ;

(இ) இலங்கைப் பல்கலைக் கழகத்தில் எந்திரவியலில் (பொறிமுறையில்) பட்டம் பெற்றவராய் இருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பட்டம் பெற்றவராய் இருத்தல் வேண்டும். அல்லது

(ஈ) லண்டன் மெக்கானிக்கல் எஞ்சினியர்ஸ் இன்ஸ்டிரியூட் கிராட்ஜுஎட் பட்டம் அல்லது அதற்கு சமமான பட்டம் உடையவராய் இருத்தல் வேண்டும், அல்லது

(உ) இலங்கைப் பொறியியலாளர் கழகத்தின் பொறிமுறைப் பொறியியலாளர் பட்டம் பெறுவதற்காய பட்ட அங்கத்துவப் பத்திரம்.

**குறிப்பு.**—(i) மேலே கூறப்பட்ட தகைமைகளையுடைய புகையிரதப் பகுதி ஊழியர்கள் 30 வயதிற்கு மேற்பட்டாலும் (விண்ணப்பங்கள் அனுப்ப விதிக்கப்பட்ட கடைசித் திகதியன்று) 40 வயதிற்கு மேற்படாமலிருந்தால், அவர்கள் விண்ணப்பிக்கலாம்.

(ii) 1961 ஆம் ஆண்டு 70 ஆம் இலக்கமுயை கட்டாய அரசாங்க சேவை அதிகாரச் சட்டத்தின்படி எந்திரவியல் பதவிகளில் பொறிமுறையாளராக நியமிக்கப்பட்டிருப்போரும் இந்த பதவிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவர்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்கள் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும் பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும்,—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ்—(**முக்கிய குறிப்பு.**—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத்தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு—இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதயிருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழில்நுட்பத் தகைமையும் உயர் தொழிற்றகைமை அல்லது தொழில் நுட்பத் தகைமைபற்றிய சான்றிதழ் :

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்துள்ள மிக உயர்ந்த பரீட்சைத் சான்றிதழ்.

**குறிப்பு.**—(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக் கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும், அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அடையை (" ஆ " எனக்குறிப்பிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை என முகவரியிட்டு அனுப்பவேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக்குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத் தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற் றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர் களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியி லிருந்து மூன்று வாரங்களுக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. இல. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1970 ம் ஆண் மே மீ 29 ந் வெ.

6-113—5.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,909

---

## கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் திணைக்களம்

### மின்முலாம் பூசுபவர் பதவி

கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழிற் திணைக்களத்தில் மின்முலாம் பூசுபவர் பதவி ஒன்றிற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. இவ்வறிக்கை யின் இறுதியிற் காணப்படும் மாதிரிப் படிவத்தில் எழுதப்பட்ட விண்ணப் பங்கள், அதிபர், கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழிற் திணைக்களம், ரொறிங்டன் சதுக்கம், கொழும்பு 7 என்று விலாசமிட்டு, அவருக்கு 1970 ம் ஆண்டு ஜூலை மாதம் 5 ந் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

2. **சேவை நிபந்தனைகளும் வேலை நியதிகளும்.**—பதவி நிரந் தரமானது. நியமனம் பெறுபவரின் இளைப்பாற்றுச்சம்பள நிலை திறைசேரியின் 1964 ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 7 ந் தேதியின் சுற்றறிக்கை இல. 633 ற் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி அமையும். மாதச் சம்பளவிதத் திட்டத்தில் இடம் பெற்றபின், அவர் இளைப்பாற்றுச் சம்பள நிலைபெறும் வரை அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவுதொகை செலுத்தி வரல் வேண்டும். அதன் பின் விதவை அனாதைச்சகாய நிதிக்கு உதவு தொகை செலுத்தி வரல் வேண்டும்.

திறைசேரியின் 1969 ம் ஆண்டு ஜூன் மாதம் 9 ந் தேதியிட்ட 765 ம் இலக்கச் சுற்றறிக்கையின் 2 ம் பந்தியின் அ, ஆ, ப் பிரிவுகளும் இதற்குப் பொருந்தும்.

3. **சம்பளம்.**—(அ) பொறியியல் அல்லது கைத்தொழில் நிலையங் களென்று திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்டு அவை கொழும்பு நகரசபை எல்லைக்குள்ளும், குறித்த எல்லையின் 5 மைல் ஆரைக்குள்ளும், அமையப்பெற்ற நிலையங்களில் தொழில் புரிந்து வருவோருக்கு :

(அ) தொழில் புரியும் நாளொன்றிற்கு ரூ. 10·70 வீதமாக முதல் ஆறு மாதங்களுக்கும் வழங்கப்பட்டபின், சம்பள அளவுத் திட்டம் ரூ. 3,240—12 தர 60—3,960 பொருந்தும்.

(ஆ) திறைசேரியால், பொறியியலோ, கைத்தொழில் நிலையங்களோ என அங்கீகரிக்கப்படாத வெளியூர் நிலையங்களில் தொழில் புரிந்து வருவோருக்கு :

தொழில் புரியும் நாளொன்றிற்கு ரூ. 9·70 வீதமாக, முதல் ஆறு மாதங்களுக்கும் வழங்கப்பட்ட பின், சம்பள அளவுத் திட்டம் ரூ. 3,060—9 தர 60—3,600 பொருந்தும்.

4. **தேவைப்படும் தராதரங்கள்.**—வயது—விண்ணப்பதாரர் ஒவ்வொரு வரும் 1970 ம் ஆண்டு ஜூலை மாதம் 1 ந் திகதியன்று, 25 வயதிற்குக் குறையாமலும், 35 வயதிற்குக் கூடாமலுமிருத்தல் வேண்டும். ஆகக் கூடுதலான வயதெல்லை அரசாங்கச் சேவையிலிருப்பவர்களுக்குப் பொருந் தாது.

**II.—கல்வியும் ஏனைய தராதரங்களும் :**

(அ) 7 ம் வகுப்பில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;

(ஆ) உலோக மின் முலாம் பூச்சிப் பாத்திரங்களில் உபயோகிப்பதற்கு தயாரிக்கும் பல்வேறு "சோடிய" இரசாயனங்களின் அளவுப் பிரமாணங் கள் பற்றி நல்ல அறிவு கொண்டவராயிருத்தல் வேண்டும்.

(இ) "நிக்கல்" முலாம் பூச்சு அல்லது "குரோமியம்" முலாம் பூச்சு, குறிப்பிட்ட பொருட்களில் பூசுவதற்கும், பாத்திரங்களை சுத்தமாக்கு வதற்கும் மின் முலாம் பூசுவதறகுமுரிய தயாரிப்புகளில் நல்ல அறிவு படைத்தவராயிருத்தல் வேண்டும்.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனமொன்றில் குறைந்த பட்சம் ஐந்து வருடங்களுக்கு மின்முலாம் பூசுவதில் அனுபவங்கொண்டவராயிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர் மேற்படி தராதரங்களோடு கூட மேலும் பின்வரும் தராதரங்களும் முன்னுரிமை வரிசையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. அங்கீகரிக்கப்பட்ட நிலையமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் குறைந்த பட்சம் 10 வருட சேவை கொண்டு அதில் 6 வருடம் 1 ம் தர சேவை கொண்டவராய் இருத்தல் வேண்டும். (இது சான்றிதழ்களுடன் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்).

2. மிகவும் நற்குணம் கொண்டவராயிருத்தல் வேண்டும் (பொறுப்பு வாய்ந்தவர்களின் சான்றிதழ்கள் வேண்டும்).

குறிப்பு.—ஐக்கியநாட்டுத் துறைகளில் இவ்வாறான சேவை புரிந்திருந் தால், அச்சேவைக்காலம், அங்கீகரிக்கப்பட்ட நிலையத்திற்சேவை புரிந்ததற்கொப்பாய் கவனிக்கப்படும்.

5. கோரப்படும்பொழுது, விண்ணப்பதாரர் பின்வரும் சான்றிதழ் களின் மூலப் பிரதிகளை ஒப்படைத்தல் வேண்டும்.

(1) வயது பற்றி பிரதம பதிவாளர்பகுதியால் வழங்கப்பட்ட பிறப்புக் கொப்பி அல்லது விசேஷ சான்றிதழ் ;

(2) கல்வித் தராதரச் சான்றிதழ்கள் ;

(3) தொழில் நுட்பத் தராதரங்கள் பற்றிய சான்றிதழ்கள் ;

(4) நற்சாட்சிப் பத்திரங்கள்.

6. அரசாங்க சேவையிலுள்ளவர்களின் விண்ணப்பங்கள் சம்பந்தப் பட்ட திணைக்களங்களினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும். குறிப்பிட்ட தேதிக்குப் பின்னர் இக்காரியாலயத்தில் கிடைக்கப்படும் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட திணைக்களத்தில் உரிய காலத்தில் கிடைக்கப்பட்டதென்றும், அதன் தாமதத்திற்குத் தகுதியான காரணம், குறித்த திணைக்களத் தலைவரால் விளக்கங்கொடுத்தனுப்பப்பட்டிருந்தால் ஏற்றுக்கொள்ளப் படும்.

7. விண்ணப்பங்களும், அது சம்பந்தமான கடிதங்களும், கிராமாபி விருத்தி சிறு கைத்தொழில் அதிபருக்கு விலாசமிட்டனுப்பல் வேண்டு மேயன்றி, தனிப்பட்ட முறையில் இத்திணைக்களத்திலுள்ள எவருக்கும் விலாசமிட்டனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவை நியமனங்களின் நிபந்தனைகள் பற்றி, இச்சுற் றிகையில் பகுதி I பிரிவு II ற் காட்டப்பட்டுள்ளவற்றைப் பார்க்குமாறு கோரப்படுகிறது.

எல். டபிள்யு. குணவர்த்தன,
கிராமாபிவிருத்தி சிறுகைத்தொழில் இலாகா.

கிராமாபிவிருத்தி சிறுகைத்தொழில்
இலாகா,
ரொறிங்டன் சதுக்கம், கொழும்பு,
1970 ம் ஆண் மே மீ 8 ந் வெ.

**குறிப்பிடப்பட்ட மாதிரிப் படிவம்**

**கிராமாபிவிருத்தி சிறுகைத்தொழில் திணைக்களத்தில் மின்மூலாம் பூசுபவர் பதவி**

1. முழுப் பெயர் (தடித்த எழுத்துக்கள்) :————.
2. விலாசம் : ————.
3. (அ) 1970 ஜூலை 1 ம் தேதியன்று வயது : ————.
   (ஆ) விவாகமானவரா, ஆகாதவரா ? :————.
4. நாட்டினமும், அது எப்படிப் பெறப்பட்டதென்றும் : ————. (வம்சாவழி இலங்கையரா ? பதிவுப் பிரசையா)
   (ஆ) வம்சாவழி இலங்கையராயின் பின்வருபவர்களின் பிறப்பிடத்தைக் கூறுக—.
   (1) விண்ணப்பதாரர் : ————.
   (2) விண்ணப்பதாரரின் தகப்பனார் : ————.
   (3) விண்ணப்பதாரரின் பாட்டனார் : ————.
   (4) விண்ணப்பதாரரின் முப்பாட்டனார் : ————.
5. பெறப்பெற்ற ஆகக் கூடிய கல்வித் தராதரம் : ————. (சித்தியெய்திய பாடங்களுடன்)
6. கல்விகற்ற பாடசாலையும் விட்டு விலகிய தேதியும் : ————.
7. பெறப்பெற்ற தொழில் நுட்பத் தராதரத்தின் முழு விபரமும் : ————. (தயவு செய்து இவ்விளம்பரத்தின் 4 ம் பந்தியிற் காட்டப்பட்டுள்ளவாறுள்ள தராதரத்தைக் கூறுக)
8. தொழிலின் முழு விபரங்களும், சேவைக் காலமும் : ————.
9. எழுத வாசிக்க மொழி பெயர்க்கக்கூடிய தேர்ச்சிகள் : ————. (1) சிங்களம் (2) தமிழ் (3) ஆங்கிலம்
10. விசேஷ தராதரங்கள் பற்றிய விபரங்கள் ஏதாவதிருந்தால் : ————. (தொழில், தொழில் நுட்பம்).
11. நற்சாட்சிப் பத்திரங்கள் பெறப்பெற்றவர்களின், பெயர், விலாசம், பதவிநாமம் முதலியன:————.
12. விண்ணப்பதாரருக்கு தனிப்பட்ட முறையாய் தெரிந்த இருவரின் பெயர், விலாசம், பதவிநாமம் முதலியன : ————.
13. வேறு ஏதாவது விசேஷ தராதரங்கள் உண்டாயின் அது பற்றிய விபரங்கள் : ————.

நான் இத்தால் அறியத் தருவதாவது, இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானதும் சரியானதுமேயாம். இதிற் காட்டப்பட்ட விபரங்கள் ஏதாவது பிழையானதும் உண்மையல்லாததுமெனக் கண்டுபிடித்தால், நான் தேர்வுக்குமுன் தகைமையற்றவனுகிவிடுவேனென்பதையும், அவ்வாறு நியமனம் பெற்றபின் பிழையானதும் உண்மையற்றதெனவும் கண்டுபிடிக்கப்பட்டால், எவ்வித நஷ்டஈடுமின்றிப் பதவி நீக்கம் செய்யப்படுவேனென்பதையும் நான் அறிந்துள்ளேன்.

————,
விண்ணப்பதாரர்.

தேதி : ————.

6-12—5.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,909

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## தரைப்படை தலைமை நிலையம்

1970 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1971 ஆம் ஆண்டு செத்தம்பர் மாதம் 30 ம் திகதி வரையில் கீழ்க்குறிப்பிட்டுள்ள வைகளை விநியோகஞ் செய்வதற்கான :—

(அ) சிலாபத்துறை, அம்பாரை, செம்பன்குண்டு ஆகிய இடங்களில் உள்ள தரைப்படை ஸ்தாபனங்களுக்கும் மரக்கறி வகைகள், பழங்கள், தேங்காய்கள், பண்ணை உற்பத்திப் பொருட்கள், இறைச்சி, புது மீன்கள் ஆகியவற்றை விநியோகஞ் செய்வதற்கும்,

(ஆ) யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, சிலாபத்துறை, செம்பன் குண்டு, யக்கச்சி ஆகிய இடங்களில் உள்ள தரைப்படை ஸ்தாபனங்களுக்கு வெட்டிய விறகு விநியோகிப்பதற்கும்,

(இ) யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, சிலாபத்துறை, செம்பன் குண்டு, யக்கச்சி ஆகிய இடங்களில் உள்ள தரைப்படை ஸ்தாபனங்களினதும், வைத்தியசாலைகளினதும் புடவைகளையும் படையினரின் உடுப்புகளையும் துவைப்பதற்கும்.

ஆன கேள்விப்பத்திரங்கள் 1970 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21 ம் திகதி பகல் 10 மணிவரையில் கொழும்பு, பாலதக்ஷ மாவத்தையில் உள்ள தரைப்படை தலைமை நிலையத்தின் கேள்விச் சபைத்தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

திருப்பிக் கொடுக்கப்படும் கட்டுப்பணம் ரூபா 75 (காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது) மேற்கூறப்பட்டுள்ள ஒவ்வொரு சேவைக்கும் தரைப்படை தலைமை நிலையத்து சிவில் பரிபாலன அதிகாரியும் கணக்காளரும் என்ற இடத்தில் கட்டவேண்டும். மேற்கூறப்பட்டுள்ள கேள்விப் பத்திரங்கள் 1970 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ம் திகதி பகல் 12 மணி வரை தரைப்படைத் தலைமை நிலையத்தில் வழங்கப்படும். மேலும் ஏனைய விபரங்களை கொழும்பு, பாலதக்ஷ மாவத்தையில் உள்ள தரைப்படைத் தலைமை நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

டி. எஸ். ஆடிகல,
மேஜர் ஜெனரால்,
தரைப்படைத் தளபதி.

தரைப்படை தலைமை நிலையம்,
பாலதக்ஷ மாவத்தை,
தபால் பெட்டி இலக்கம் 553,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு மே மாதம் 26 ம் திகதி.

6—71—5.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,909

---

## கச்சேரி—மட்டக்களப்பு

**பழுது பார்க்கப்படாத நில மோட்டார் வாகனம் விற்பனை—2 சிறி 4594**

மட்டக்களப்பு கச்சேரி ரெண்டர் சபைத் தலைவரால், 1970 ம் ஆண்டு ஜூன் மாதம் 16 ந் திகதி மு. ப. 10.00 மணி வரைக்கும், சீல் செய்யப்பட்டுள்ள ரெண்டர் பத்திரங்கள் கச்சேரி வளவுக்குள் மேற்குறிக்கப்பட்ட வாகனம் விற்பதற்காக ஏற்றுக்கொள்ளப்படும். ரெண்டர் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாளே இது திறக்கப்படும். ரெண்டர் பத்திரங்கள் அனுப்பிய யாவரும், ரெண்டர் திறக்கும்பொழுது பிரசன்னமாக இருப்பதற்கு அனுமதிக்கப்படும்.

2. ரெண்டர் பத்திரம் விநியோகிப்பதற்கு முன் திருப்பிக் கொடுக்கப்படும் ரூபா 500 மட்டக்களப்பு கச்சேரியில் கட்டப்பட வேண்டும். 1970 ம் ஆண்டு ஜூன் மாதம் 15 ந் திகதி பகல் 12.00 மணி வரைக்கும் ரெண்டர் பத்திரங்கள் விநியோகம் செய்யப்படும். ரெண்டர் பத்திரங்கள் பதிவு செய்த தபால் மூலம் தலைவர், ரெண்டர் சபை, கச்சேரி, மட்டக்களப்பு என்ற விலாசத்திற்கோ அல்லது நேர்முகமாகக் கொடுப்பின், கச்சேரியிலுள்ள காரியாலய பரிபாலனருக்குக் கொடுக்கவும். ரெண்டர் அனுப்பப்படும் உறையின் இடது மேற் பக்கத்தில், " ரெண்டர் 2 சிறி 4594 " என்று எழுத வேண்டும்.

3. மட்டக்களப்பு அதிபருடைய அனுமதியுடன் வேலை நாட்களில் கந்தோர் நேரத்தில் கச்சேரி வளவுக்குள் வாகனம் பார்க்கலாம்.

4. சித்தியடைந்த ரெண்டர் செய்யப்பட்டவர் கேட்கப்பட்டுள்ள முழுப் கணத்தையும் கொடுத்து ரெண்டர் ஏற்கப்பட்ட ஒரு கிழமைக்குள் வாகனத்தை ஏற்க வேண்டும்.

5. எதுவித காரணமுமில்லாமல ஏதாவது ஒரு ரெண்டரையோ அல்லது எல்லா ரெண்டர்களையுமோ இரத்துச் செய்வதற்கு மட்டக்களப்பு கச்சேரியில் உள்ள ரெண்டர்சபை தலைவருக்கு அதிகாரமுண்டு.

6. வேறு விபரங்கள் மட்டக்களப்பு கச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம்.

கே. ஈ. ஜே. எட்கார் பெர்னாந்து,
மேலதிக அரசாங்க அதிபர்,
மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

கச்சேரி,
மட்டக்களப்பு,
10 மே, 1970.

6—68—5.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,909

## இலங்கை அரச கடற்படை

1970 -ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 1971 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை கீழ்க்காணும் சேவைகளுக்குரிய விண்ணப்பப் பத்திரங்கள் ஒவ்வொரு சேவைக்கெதிரே காட்டப்பட்டுள்ள திகதிகளில் காலை 10 மணி வரை கொழும்பு, த. பெ. இல. 593, கொடிமர வீதியிலுள்ள, இலங்கை அரச கடற்படைத் தலைமைக் காரியாலயத்தில், ரெண்டர் சங்கத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| 1<br>சேவைகள் | 2<br>ரெண்டர்கள் முடிவடையும் கடைசித் திகதி | 3<br>விண்ணப்பப் பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி | 4<br>விண்ணப்பப் பத்திரங்கள் ஆரம்பிக்கும் திகதி |
|---|---|---|---|
| (அ) திருகோணமலையிலுள்ள தரைப்படை, இலங்கை அரச கடற்படை, இலங்கை அரச விமானப் படையினருக்கு இறைச்சி வழங்கல் .. .. .. .. | 14.6.1970<br>ந.ப. 12.00 | 16.6.1970<br>மு.ப. 10.00 | 16.6.1970<br>மு.ப. 10.30 |
| (ஆ) திருகோணமலையிலுள்ள தரைப்படை, இலங்கை அரச கடற்படை, இலங்கை அரச விமானப் படையினருக்கு மீன் விநியோகித்தல் .. .. .. | 14.6.1970<br>ந.ப. 12.00 | 16.6.1970<br>மு.ப. 10.00 | 16.6.1970<br>மு.ப. 10.30 |
| (இ) கொழும்பிலுள்ள தரைப்படை, இலங்கை அரச கடற்படை, இலங்கை விமானப்படையினருக்கு மீன் வழங்கல் .. .. .. .. .. | 14.6.1970<br>ந.ப. 12.00 | 16.6.1970<br>மு.ப. 10.00 | 16.6.1970<br>மு.ப. 10.30 |
| (ஈ) கொழும்பிலுள்ள இலங்கை அரச கடற்படையினருக்குக் காலை ஆகாரம் வழங்கல் .. | 14.6.1970<br>ந.ப. 12.00 | 16.6.1970<br>மு.ப. 10.00 | 16.6.1970<br>மு.ப. 10.30 |
| (உ) வெலிசறையிலுள்ள இலங்கை அரச கடற்படையினருக்கு இறைச்சி வழங்கல் .. | 20.6.1970<br>ந.ப. 12.00 | 22.6.1970<br>மு.ப. 10.00 | 22.6.1970<br>மு.ப. 10.30 |
| (ஊ) வெலிசறையிலுள்ள இலங்கை அரச கடற்படையினருக்கு மீன் வழங்கல் .. .. | 20.6.1970<br>ந.ப. 12.00 | 22.6.1970<br>மு.ப. 10.00 | 22.6.1970<br>மு.ப. 10.30 |
| (எ) வெலிசறையிலுள்ள இலங்கை அரச கடற்படையினருக்குக் காலை ஆகாரம் வழங்கல் .. | 20.6.1970<br>ந.ப. 12.00 | 22.6.1970<br>மு.ப. 10.00 | 22.6.1970<br>மு.ப. 10.30 |
| (ஏ) வெலிசறையிலுள்ள இலங்கை அரச கடற்படையினருக்கு மரக்கறி, தேங்காய், வெண்ணெய், கோழிமுட்டை ஆகியன வழங்கல் .. .. .. .. | 20.6.1970<br>ந.ப. 12.00 | 22.6.1970<br>மு.ப. 10.00 | 22.6.1970<br>மு.ப. 10.30 |
| (ஐ) காரைநகரிலுள்ள இலங்கை அரச கடற்படையினருக்குக் காலை ஆகாரம், மரக்கறி, தேங்காய், வெண்ணெய், கோழிமுட்டை வழங்கல் .. .. .. | 24.6.1970<br>ந.ப. 12.00 | 27.6.1970<br>மு.ப. 10.00 | 27.6.1970<br>மு.ப. 10.30 |
| (ஒ) காரைநகரிலுள்ள இலங்மை அரச கடற்படைக்கு மீன், இறைச்சி வழங்கல் .. | 24.6.1970<br>ந.ப. 12.00 | 27.6.1970<br>மு.ப. 10.00 | 27.6.1970<br>மு.ப. 10.30 |

2. விண்ணப்பகாரர்களின் பண உறுதி நிதி நிலையைப் பற்றிய முழு விவரங்களுடன் சமர்ப்பிக்கப்படும் மனுவின் பெயரில், மேற்கூறப்பட்டுள்ள சேவைகளுக்குரிய விண்ணப்பப் பத்திரங்கள், ஒவ்வொரு சேவைக்கெதிரே 2 ம் பிரிவில் காட்டப்பட்டுள்ள திகதிகளில், நண்பகல் 12 மணி வரை, கொழும்பு 1, கொடிமர வீதியிலுள்ள, இலங்கை அரச கடற்படைத் தளபதியால் வழங்கப்படும்.

3. விண்ணப்பப் பத்திரங்கள் வழங்கப்படுமுன், மேற்கூறப்பட்ட ஒவ்வொரு சேவைக்கும் திரும்பப் பெறக்கூடிய ரூபா 75 வீதம் கடற்படைத் தலைமைக் காரியாலயத்தில் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. காசுக் கட்டளைகள் கடற்படைத் தளபதியின் பெயரில் எழுதப்படல் வேண்டும்.

4. விண்ணப்பகாரர்கள், விண்ணப்பப் பத்திரங்கள் கோரும்போது, தங்கள் முழுப் பெயரையும் விலாசத்தையும் அறிவித்தல் வேண்டும்.

5. ரெண்டர்ப் பத்திர விண்ணப்பக்காரர்கள், தாங்கள் விரும்பும் சேவைகளையும் சேவை செய்வதற்கு விரும்பும் ஸ்தானங்களையும் அறிவித்தல் அவசியம்.

கடற்படைத் தளபதி,
இலங்கை அரச கடற்படைத் தலைமைக் காரியாலயம், கொடிமர வீதி,
த. பெ. இல. 593,
கொழும்பு 1,
1970 ௵ மே ௴ 17 ந் உ.

ஆர். கதிர்காமர்,
றியர் அட்மிரல்,
கடற்படைத் தளபதி.

6-40—5.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,909

---

## கச்சேரி—வவுனியா

15.5.70 ம் திகதியில் வெளியான அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டிட வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியான 2.6.70, 1970 ம் ஆண்டு யூன் மாதம் 16 ம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.

கச்சேரி,
வவுனியா,
25.5.70.

பி. சி. பெரேரா,
வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர்.

6-61—5.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,909

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### கொழும்பு உப பிரிவு

கீழே சொல்லப்பட்ட வேலைக்கு கேள்விப்பத்திரம் கொழும்பு 5, ஜாவத்த வீதியிலுள்ள மேற் பிரிவு பெரும்பாக பொறியியலாளர் அவர்களால் 1970 ம் ஆண்டு ஜூன் மாதம் 28 ந் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு உடனே திறக்கப்படும்.

2. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வேலைக்கு நேராக உள்ள தொகைக்கோ அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கோ நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும், கூட்டுறவுச் சங்கங்களும், கிராம அபிவிருத்திச் சங்கங்களுமே இவ்வேலைக்கு கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

| வேலையின் பெயர் | ஒப்பந்தக்காரரின் பதிவுத் தொகை | கேள்விக் கட்டணம் |
|---|---|---|
| களனி வடக்கு அணைக்கு வேண்டிய திருத்தங்கள் .. .. | ரூ. 40,000 .. | ரூ. 50 |

3. இக் கேள்விக்காக வெற்றுப் பத்திரம் கொழும்பு, கழுத்துறை, கம்பஹா, இரத்தினபுரி ஆகிய உப பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர்களின் காரியாலயங்களின் அலுவலக நேரங்களில் 1970 ம் ஆண்டு ஜூன் மாதம் 25 ந் திகதி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விக்காரர்களாக முன்வருவோரைக் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கும் தகுதியுடையவர்களா அல்லவா என்று ஆராய்ந்தறியும் பொருட்டு நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குத் தங்கள் பதிவுப் புத்தகத்துடன், தாங்கள் தற்போது திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளையும் அவைகளின் பெறுமதிகளையும் ஓர் பத்திர மூலம் கேள்விக்காரர்களாக வருவோர் வெற்றுப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் நேரத்தில் வெளிப்படுத்தல் வேண்டும். வெற்றுப் பத்திரங்கள் பெறுமுன் 1970 ம் ஆண்டு ஜூன் மாதம் 25 ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ அலுவலக நேரத்தில் மேற்கூறிய கேள்விக் கட்டணத்தை நீர்ப்பாசனப் பொறியியலாளரின் காரியாலயத்தில் கட்ட வேண்டும் அல்லது ஒரு கச்சேரியில் கட்டிய பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. மேற்படி வேலைகளைப் பற்றிய படங்களையும் வேறு தேவையான விபரங்களையும் அலுவலக நேரங்களில் கொழும்பு உப பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஐ. எச். பெரேரா,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கொழும்பு உப பிரிவு.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
ஜாவத்த வீதி,
கொழும்பு 5,
22.5.1970.

6–22—5.6.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,909

அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

1.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது

# இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)

வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும், மற்றும் நாட்களில் மு.ப. 9 மணி முதல் பி.ப. 4.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி.ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறொக்ரரால்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | | | | ரூ. | ச. |
|---|---|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | .. | .. | .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | | .. | .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | .. | .. | .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | | .. | .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்து சேரவேண்டும்.

13. சந்தா விபரம் 1.12.69 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | | | | உள்ளூர் ரூ. ச. | | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் | .. | .. | .. | 46 0 | .. | 60 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு | .. | .. | .. | 36 0 | .. | 42 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் | | .. | .. | 43 50 | .. | 51 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | | விலை ரூ. ச. | | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|---|---|---|
| (அ) | (i) | வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 50 | .. | 20 |
| | (ii) | வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 0 | .. | 20 |
| (ஆ) | (i) | வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 30 | .. | 15 |
| | (ii) | வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 60 | .. | 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1970**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஏப்பிறல் | .. | 3.4.70 | வெள்ளி | .. | 25.3.70 | புதன் | .. பி. ப. | 3.30 |
| | | 10.4.70 | வெள்ளி | .. | 3.4.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 17.4.70 | வெள்ளி | .. | 8.4.70 | புதன் | .. பி. ப. | 3.30 |
| | | 24.4.70 | வெள்ளி | .. | 17.4.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 30.4.70 | வியாழன் | .. | 23.4.70 | வியாழன் | .. பி. ப. | 3.30 |
| மே | .. | 8.5.70 | வெள்ளி | .. | 30.4.70 | வியாழன் | .. பி. ப. | 3.30 |
| | | 15.5.70 | வெள்ளி | .. | 8.5.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 22.5.70 | வெள்ளி | .. | 15.5.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 29.5.70 | வெள்ளி | .. | 22.5.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| யூன் | ... | 5.6.70 | வெள்ளி | .. | 29.5.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 11.6.70 | வியாழன் | .. | 5.6.70 | வெள்ளி | .. பி. ப. | 3.30 |
| | | 18.6.70 | வியாழன் | .. | 11.6.70 | வியாழன் | .. ந. ப. | 12.00 |
| | | 25.6.70 | வியாழன் | .. | 18.6.70 | வியாழன் | .. ந. ப. | 12.00 |

எஸ். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு மாச்சு மீ 5 ஆந் உ.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.